**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**<u>அசல் வழக்கு எண். 24/2020</u>**

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் நாள் வியாழக் கிழமை வாதி/ பிரதிவாதி சாட்சியாகிய இவ்வாக்குமூலம் ஆக்ட் 10/1873ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.ஜீவானந்தம், இளநிலை உதவியாளர் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையிலும் நேரடி கவனத்திலும் கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | வேலு | தொழில் | : |
| தந்தை பெயர் | : | அண்ணாமலை | ஜாதி | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுக்கா | : | | வயது | : |

**வா.சா.1 முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். நான் பூசிமலைகுப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் இந்தவாக்குமூலத்தை சத்தியபிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

2. வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.